IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 20/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 17, PW 9 |
| Name | **மகாவீர்சந்த்.** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of June 2026. **(12.06.2026.)**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் எல்லநள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் எல்லநள்ளியில் ஸ்ரீ.எ.எம் பைனான்ஸ் என்ற பெயரில் அடகு கடை நடத்தி வருகிறேன். எனது கடை மற்றும் வீடு ஒரே கட்டிடத்தில் உள்ளது. மேல் பகுதியில் கடையும், கீழ் பகுதியில் வீடும் உள்ளது. பொதுவாக நானும், எனது கடையின் சிப்பந்தி மலர் என்பவர்கள்தான் கடையில் இருப்போம். எனது பணியாளர் கடையில் நகையை எடை போடுதல் மற்றும் ரசீது தயாரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவார். அவர் அவ்வாறு நகையை மதிப்பீடு செய்த பின்னர், அதற்கேற்ற பணத்தை நான் கொடுப்பேன்.

**ஆஜர் 1 ஆம் எதிரி கோகுல் எனது கடையின் வாடிக்கையாளர்தான், அவரை எனக்கு தெரியும். அவர் தேனலை கிராமத்தை சேர்ந்தவர். எனது கடைக்கு நகைக்கடன் பெறுவதற்காக வருவார்.**

கடந்த 12.12.2021 ஆம் தேதி எனது கடையில் பணிசெய்யும், மலர் என்பவர் எனக்கு போன் செய்து, கோகுல் என்பவரின் அக்கா மாடியில் இருந்து கீழே விழுந்துவிட்டதாகவும், மருத்துவ சிகிச்சைக்கு அவசரமாக பணம் தேவைப்படுவதாகவும், நகையை அடகு வைத்துவிட்டு, பணம் வேண்டும் என்று சொல்வதாக சொன்னார். நான் கடைக்கு அருகிலேயே வேறு வேலையாக அப்போது இருந்தேன். அன்று கடை ஞாயிற்று கிழமை என்பதால் வார விடுமுறை ஆகும். மலர் என்பவரது வீடும் எனது கடை அருகிலேயே உள்ளது. நான் நீங்கள் கடைக்கு போங்கள் நான் வந்துவிடுகிறேன் என்று சொன்னேன்.

நான் கடைக்கு போனேன் அதற்குள் மலரும் கோகுலும் கடையில் இருந்தார்கள். மலர் நகையின் எடையை சரிபார்த்து கொண்டிருந்தார்கள். கோகுல் அடகு வைப்பதற்காக ஒரு ஜோடி தங்க கம்மலும், தங்க மோதிரமும் ஈடாக அடமானம் வைத்தார். அந்த தங்க மோதிரம் மற்றும் தங்க கம்மல்தான் தற்சமயம் என்னிடம் காட்டப்படுவது. அந்த தங்க மோதிரம் (சா.பொ.1) ஆகும். அந்த ஒரு ஜோடி தங்க கம்மல் (சா.பொ.2) ஆகும். **(எதிரிகள் தரப்பில் சா.பொ.1 மற்றும் 2 ஐ குறியீடு செய்வதில் தங்களது ஆட்சேபனையை தெரிவித்தனர். சா.பொ.1 மற்றும் 2 கைப்பற்றப்பட்ட போது இருந்த சாட்சிகள்தான் அடையாளம் காட்டவேண்டும் என்று ஆட்சேபனையை தெரிவித்தது பதிவு செய்யப்பட்டது,)**

1 ஆம் எதிரி எங்கள் நிதி நிறுவனத்தில் அடமானம் வைத்தற்காக வழங்கப்பட்ட அடமான ரசீது எங்கள் நிதி நிறுவனத்தால் வழங்கப்பட்டதுதான். அது தற்சயம் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த ரசீது (அதசாஆ 5) ஆகும். அந்த அடமான சீட்டு 12.12.2021 ஆம் தேதி நான் கையெழுத்திட்டு வழங்கினேன். அந்த நகையை அடமானம் வைத்தற்காக கோகுல் என்பவருக்கு ரூபாய் 30000/- பணம் கொடுத்தேன். பின்னர், 14.12.2021 அன்று ஒன்னாம் எதிரி கோகுல் 30200/-

பணத்தை செலுத்தி, அடமானம் வைத்த நகையை மீட்டு சென்றுவிட்டார். பணத்தை திருப்பி செலுத்தி நகையை மீட்டதற்கு ரசீது வழங்கினேனா என்று கேட்டால் அதற்கு பிரத்தியேகமாக ரசீது வழங்கியுள்ளேன்.

பின்னர், 20.12.2021 அன்று காவல் ஆய்வாளர் எனது கடைக்கு வந்தார். என்னை விசாரித்துவிட்டு, காவல் நிலையம் என்னை வரச்சொன்னார்கள். மேலே விவரித்தபடி 1 ஆம் எதிரி கோகுல் எங்கள் நிதி நிறுவனத்தில் அடகு வைத்தது, பணம் வாங்கி சென்றதது, பின்னர் பணத்தை கொடுத்து, நகையை மீட்டு சென்றது குறித்து தெரிவித்தேன். அப்போது, அதசாஆ 5 ஆவணத்தை நான்தான் போலீசார் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் எ. எம் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தை உரிமம் பெற்றுதான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எங்கள் நிதி நிறுவனத்தின் உரிமத்தை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தை கடையில் வழக்கின் அடிப்படையில் சரிபார்த்தார்கள். அந்த உரிமத்தை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. கோகுல் பணம் கேட்ட அன்று எங்கள் கடை விடுமுறை என்றால் சரிதான். 1 ஆம் எதிரி எங்களிடம் கடன் எதன் வாயிலாக கேட்டார் என்ற கேட்டால் போன் வாயிலாக கேட்டார்.

அலைபேசி அழைப்பு விவரத்தை போலீசார் கைப்பற்றினார்களா என்ாறல் இல்லை. எங்கள் நிதி நிறுவனத்திற்கு தனியாக போன் உள்ளது என்றால் சரிதான். அந்த தொலைபேசி எண்ணிற்குதான் கோகுல் அழைத்தாரா என்றால் சரிதான். எனது கடையின் அலைபேசி எண் 93448 42727. இந்த எண்ணிற்கு 1 ஆம் எதிரி கோகுல் அழைத்துள்ளார். அவர் எண்ணில் இருந்து அழைத்தார் என்று தெரியாது. எனினும், இந்த அழைப்பு சம்பந்தமான அழைப்பு ஆவணங்கள் போலீசார் கைப்பற்றவில்லை. அடமான கடன் சம்பந்தமான பதிவு ஆவணங்கள் நாங்கள் அதிகாரப்பூர்வமான பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான்.

அவ்வாறு அடமானம் கடன் சம்பந்தமாக பதிவு ஆவணங்களை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனினும், எங்கள் கடைக்கு வந்து போலீசார் அந்த ஆவணங்கனை பார்த்தார்கள். அதசாஆ 5 ஆவணத்திற்கு அலுவலக பிரதி ஒன்று இருக்கம் என்றால் சரிதான். அந்த அலுவலக பிரதியை போலீசார் என்னிடம் எதுவும் கைப்பற்றவில்லை. தேதி குறிப்பிடும் போது 11 என்பது 12 என திருத்தப்பட்டுள்ளது என்றால் 12 ஆம் தேதிதான் கொடுத்தோம். எனினும், எனது பணியாளர் எழுதும் போது திருத்தியிருக்களாம். அதசாஆ 5 மேற்பகுதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ள தேதியின் கீழ் குறிப்பிட்டுள்ள கையெழுத்து எனது பணியாளருடையது என்றும், கீழே உள்ள ஒப்புகை கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான்.

அதசாஆ 5 ஐ நான் காவல் நிலையம் சென்றுதான் கொடுத்தேன். போலீசார் என் கடைக்கு வந்து, எங்கள் கடையின் ஆவணங்களை சரிபார்த்தது குறித்து நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த விவரங்கள் நான் குவிமுச 161 வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றும், தற்சமயம் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் 1 ஆம் எதிரி எங்கள் நகை கடையில் அடமானம் வைத்திருந்தால் அது சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்களை போலீசார் கைப்பற்றியிருக்க கூடும் என்றும், அந்த ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால், அதசாஆ 5 என்பது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நாங்கள் வழங்கும் ரசீதுகளுக்கு வரிசை எண் உள்ளது.

வரிசை எண்ணை பொருத்து பதிவு ஆவணங்களை ஒப்பிடு செய்தால்தான் உறுதி செய்ய முடியும் என்றால் சரிதான். ஆவணங்கள் உள்ளது. மீட்கப்பட்ட அடமானம் அதற்கான ஒப்புகை குறித்த ஆவணங்களை போலீசார் கைப்பற்றினார்களா என்று கேட்டால் சரிபார்த்தார்கள். எனினும், அடமானம் மீட்பு ஒப்புகை மீட்பு ஆவணம் எங்கள் நிறுவனத்திடம்தான் உள்ளது. 12.12.2021 அன்று 1 ஆம் எதிரி எந்த நகையும் அடமானம் வைக்கவில்லை என்றும், 14.12.2021 அன்று

அவர் அடமான மீட்பு செய்யவில்லை என்றும், இந்த நிகழ்வுகள் நடந்திருக்கும்பட்சத்தில் அதற்கான ஆவணங்கள் போலீசா இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பொதுவாக வாடிக்கையாளர்கள் எங்களிடம் அடமானம் வைக்கும் போது அடமானம் வைக்கப்படும் நகையின் வகையை குறித்து மட்டும் குறிப்பிடுவோம் என்றும், ஆதலால் ஒரு வாடிக்கையாளர் இந்த நகையைதான் வைத்தார் என்று குறிப்பிட்டு அடையாளம் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. ஒவ்வொரு வாடிக்கையாளரும் வைக்க கூடிய நகையை குறித்து அந்த நகை கடன் அதற்குண்டான எண் அந்த நகையோடு சேர்த்து உள்ள சிட்டையில் குறிப்பிடுவோம். நான் முதல் சாட்சியத்தில் சொன்னது போலீசார் கேட்டு கொண்டதற்காக அளித்த பொய் சாட்சியம் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிரி எங்கள் பணியாளருக்கு போன் செய்து கடைக்கு வந்த சமயம் மாலை 6.30 மணி இருக்குமா என்றால் மாலை 6.30 மணி இருக்கும், சரிதான்.

**<u>மறு விசாரணை:–</u>**

இல்லை.

sd/- மகாவீரசந்த்./

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.